### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – நாளை

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நாளை (22.8.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



**பொருள்: கழக ஆக்கப் பணிகள்**

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.

### பொதுப்பணித் துறைப் பணிகளுக்கான

# ஒப்பந்தத் தொகைகளை அமைச்சர்கள் நிர்ணயம் செய்வது இல்லை!

### சட்டப் பேரவையில் – முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு – முதல்வருக்கு விளக்கம்!

**சென்னை, ஆக. 21- சட்டப் பேரவையில் பொதுப் பணித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் சட்டமன்ற தி.மு.க. கொறடாவும் - முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பங்கேற்றுப் பேசுகையில், பொதுப்பணித்துறை சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தங்களில் அதற்கான தொகையினை நிர்ணயிப்பது குறித்து முதல்வர் விஜய்க்கு விளக்கம் ஒன்றை வழங்கினார்.**

அது வருமாறு:-

இந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, யார் ஆட்சிக்கு வந்தாலும் சரி, Schedule of Rates என்பது 1947 ஆம் ஆண்டிலிருந்து இருக்கிறது. தற்போது புதிதாக வந்துவிடவில்லை. அதை தனிப்பட்ட அமைச்சர்கள், அதாவது, அவர் பொதுப் பணித் துறை அமைச்சர் என்பதற்காக அவர் அதை தயார் செய்துகொள்ள முடியாது.

இதை பல்வேறு துறைகளிலுள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், நிதித் துறையின் செயலாளர் தலைமையில் ஆலோசித்து தயார் செய்கிறார்கள். அதை வைத்துத்தான் estimate தயார் செய்கிறோம். இதில் யார் ரேட்டை ஏற்றுவது? ரேட் ஏற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் மீண்டும் சொல்கிறார்; அது தவறு.



டெண்டர் போடும் போது, சில ஒப்பந்ததாரர்கள், தங்களுக்கு எப்படியாவது அந்தப் பணி கிடைக்க வேண்டும் என நினைப்பார்கள். சில ஒப்பந்ததாரர்கள், தங்களுக்கு லாபம்கூட வேண்டாம்; நம்மிடம் உள்ள ஆட்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும்; வேலையில்லாமல் உட்கார வைத்துக் கொண்டு, அவர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாது; இயந்திரங்களுக்கு டீசல் நிரப்பியாக வேண்டும் போன்ற அடிப்படையில்கூட குறைந்த மதிப்பீட்டில் டெண்டர் போடுவார்கள்.

ஏனெனில், *Schedule of Rates* முடித்து, டெண்டர் விடுவதுடன் முடிந்து விடும். இன்னும் சொல்லப்போனால், அமைச்சர், மானியக் கோரிக்கையில், என் துறைக்கு இவ்வளவு நிதி வேண்டுமென்று கோருகிறார் என்றால், அதை *pass* செய்துவிட்டால் வேலை முடிந்து விடும். இதற்குப் பின்னர் துறைதான் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அமைச்சருக்கு இதில் எந்தச் சம்பந்தமுமில்லை. (குறுக்கீடு)

இவ்வாறு எ.வ.வேலு அவர்கள் விளக்கமளித்தார்.

### விஜய் அரசின் இரட்டை வேடம் அம்பலம் பட்டியல் இன மாணவர்களின் வாழ்வைச் சிதைக்கும் த.வெ.க. அரசு!

# அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்திற்கு மூடு விழாவா?

### தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் - இ.பரந்தாமன் அறிக்கை!

**சென்னை, ஆக. 21 - தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் - கழக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**



த.வெ.க. ஆட்சியில் 8 பட்டியலின அமைச்சர்கள் இருந்தும், ஒரு தலித் மாணவர் தன் ஆராய்ச்சிப் படிப்பைத் தொடர முடியாமல் பரிதவிக்கும் பரிதாபகரமான நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஏழை - எளிய பட்டியல் சமூக மாணவர்கள் அயல் நாடுகள் சென்று உயர் கல்வி பயில பொருளாதாரம் எந்தவிதத்திலும் தடையாக இருக்க கூடாது என்ற உயரிய நோக்கத்தோடு அன்றைய முதலமைச்சர் எங்களின் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த திட்டம்தான் அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி திட்டம்! அந்த திட்டத்தில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களில் உயர்கல்வி படித்து வரும் மாணவர்களுக்கு நிதியுதவியை வழங்காமல் இழுத்தடித்து வருகிறது த.வெ.க. அரசு.

தகுதிவாய்ந்த SC, ST மாணவர்கள் வெளிநாடுகளில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் முதுகலை, பிஎச்.டி மற்றும் முதுமுனைவர் (Post Doctoral) ஆராய்ச்சிகளை மேற்கொள்ள அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் முழு நிதியுதவித் வழங்கப்பட்டு வருகிறது.

மாணவர்களின் குடும்ப வருமான அடிப்படையில் கல்விக் கட்டணம், வாழ்க்கைச் செலவினம் உட்பட ஆண்டுக்கு அதிகபட்சமாக 36 லட்சம் வரை முழு நிதியுதவி வழங்கப்படுகிறது.

அதோடு விசா, விமானப் பயணக் கட்டணம், மருத்துவக் காப்பீடு போன்ற இதர செலவுகளும் இந்த திட்டத்தில் ஏற்கப்படுகின்றன. வெளிநாடு சென்று உயர் கல்வி பயிலத் திட்டமிடும் மாணவர்களுக்கு, விசா மற்றும் தகுதித் தேர்வுகளுக்கான பயிற்சிகளும் நான் முதல்வன் திட்டம் மூலமாக விலையில்லாமல் வழங்கப்பட்டன.

கழகத் தவைர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் எந்த தொய்வும் இல்லாமல் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருந்த இந்த திட்டம், த.வெ.க. ஆட்சியில் நிதி தாமதத்தால் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மலேசியாவில் உள்ள மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தில் திசுப் பொறியியல் மற்றும் மீளுருவாக்கம் மருத்துவத் துறையில் 2ஆம் ஆண்டு பிஎச்.டி பயிலும் மதுரையைச் சேர்ந்த பாரதிதாசன் என்ற ஆராய்ச்சி மாணவர் நிதி தாமதம் தொடர்பாக வீடியோ வெளியிட்டிருக்கிறார்.

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் 2023ல் மலேசியா சென்ற பாரதிதாசன் முதலாம் ஆண்டிற்கான (2024) கட்டணங்களை அரசு வழங்கியதாகவும் ஆனால், இரண்டாம் ஆண்டிற்கான (2025 - 2026) கல்விக் கட்டணம் மற்றும் வாழ்க்கைச் செலவிற்கான நிதி வரவில்லை என சொல்லியிருக்கிறார். கடந்த ஏப்ரல் மாதம் வர வேண்டிய நிதி 5 மாதங்களாக வரவில்லை என்று வேதனை தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக பாரதிதாசன் அமைச்சருக்கும், செயலாளருக்கும் 12 முறை மின்னஞ்சல்கள் அனுப்பியும் அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. நிதி கிடைக்காததால் மருத்துவ ஆராய்ச்சி பாதிக்கப்பட்டு நண்பர்களிடம் கடன் வாங்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

மின்னஞ்சல் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காத அரசு, பாரதிதாசன் வெளியிட்டிருக்கும் வீடியோ வைரல் ஆன நிலையில் தவறை மறைக்க, அவர் செலவின ஆவணங்களை முறைப்படி சமர்ப்பிக்கவில்லை எனப் பொய்யான காரணங்களை இப்போது முன் வைக்கிறது.

இது தொடர்பாக இத்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் வன்னி அரசு வெளியிட்டிருக்கும் அறிக்கை த.வெ.க. அரசின் தவறை மறைக்கும் முயற்சியாகவே தெரிகிறது. அமைச்சர் வெளியிட்ட அறிக்கையிலே பாரதிதாசனுக்கு நிதி வழங்கப்பட்ட தேதிகளை குறிப்பிட்டிருக்கிறார். அந்த தேதிகள் அத்தனையும் தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வழங்கப்பட்டவை. அவரே உண்மையை போட்டு உடைத்துவிட்டார். தி.மு.க. ஆட்சியில் நிதியுதவி கிடைத்த மாணவனுக்கு த.வெ.க. ஆட்சியில் கிடைக்காமல் போனது ஏன்?

பாரதிதாசன் ஏப்ரல் மாதமே ஆவணங்களை அனுப்பியிருக்கிறார். மின்னஞ்சல் மூலமும் நினைவூட்டியிருக்கிறார். அவருடைய பெற்றோர் அமைச்சரை நேரிலும் சந்தித்து சொல்லியிருக்கிறார்கள். இவை எதன் மீதும் நடவடிக்கை இல்லை என்பதால்தான் மன உளைச்சலில் பாரதிதாசன் வீடியோ வெளியிட்டார். அவர் தேதி வாரியாக அரசிடம் முன் வைத்த கோரிக்கையையும் ரசீது ஆவணங்களையும் வெளியிட்டுள்ள நிலையில் த.வெ.க. அரசு தனது முகத்தை எங்கே கொண்டு போய் வைத்துக்கொள்ளப் போகிறது?

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகத் தொடங்கப்பட்ட இயக்கமான விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த வன்னி அரசு பொறுப்பு வகிக்கும் துறையில், பட்டியல் இன மாணவரின் அயலக உயர் கல்விக் கனவு சிதைக்கப்படுவது வேதனையின் உச்சம். சமூக நீதித்துறை அமைச்சருக்கு இந்த ஆட்சியில் கொஞ்சமாவது அதிகாரம் இருக்கிறதா? அல்லது சூப்பர் பவராக இயங்குபவர்கள்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறார்களா?

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தில் மிக முக்கியமான இன்னொரு பிரச்னையும் இருக்கிறது. இங்கிலாந்தில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்கள், தமிழ்நாடு அரசு வழங்கும் இந்த உதவித் தொகைக்கான ஆவணங்களை அதிகாரப்பூர்வ நிதி ஆதாரமாக ஏற்றுக்கொள்ள மறுப்பதால் இந்த ஆண்டு வெளிநாடு செல்லவிருக்கும் 300க்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி குறித்த எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த ஆண்டு பிரிட்டனில் படிக்க விண்ணப்பித்த 316 மாணவர்களின் விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த சிக்கலைத் தீர்க்க, உடனடியாக பிரிட்டன் தூதரகத்துடனும், இங்கிலாந்து அரசுடனும் பேசக் கோரி தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் - நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவசரக் கடிதம் எழுதியிருக்கிறார்.

எதிர்க் கட்சியாக இருந்தாலும் தி.மு.க. ஒன்றிய அரசிடமும் சம்மந்தப்பட்ட தூதரக அதிகாரிகளிடமும் கடிதங்கள் எழுதி குரல் கொடுத்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? ஒன்றிய அரசிடம் இதுபற்றி பேசியதா? ஒன்றிய அரசுக்கு இதுதொடர்பாக சமூக நீதித் துறை அமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறாரா? விஜய் வாய் திறக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன? அனைத்தையும் மூடி மறைக்கும் பொம்மை அரசாக செயல்பட்டு கொண்டிருக்கிறது விஜய் அரசு.

சட்டமன்றத்தில் இந்த பிரச்சினையை தி.மு.க. உறுப்பினர் கோவி.செழியன் எழுப்பிய போது அதே பொய்யை சொல்லியிருக்கிறார் அமைச்சர் வன்னி அரசு. பிரச்சினையை தீர்ப்பதற்கு பதில், பழி தீர்க்கும் நோக்கம் மட்டுமே அவருடைய உரையில் வெளிப்பட்டிருக்கிறது.

பட்டியல் இனத்தவர்களின் உயர்கல்விக்காக சிறந்த நோக்கத்துடன் திராவிட மாடல் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தை முடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுவது போலவே விஜய் தலைமையிலான த.வெ.க. அரசின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்திய அளவில் ஒன்றிய பா.ஜ.க. அரசு பட்டியல் இன மாணவர்களுக்கான கல்வி நிதியுதவிகள் பலவற்றை நிறுத்தியுள்ள நிலையில், பா.ஜ.க. வழியிலேயே தமிழ்நாட்டில் உள்ள த.வெ.க. கூட்டணி அரசும் செயல்படுகிறது.

தாங்கள் பதவியில் இருப்பதற்காக தலித் மாணவர்களின் உழைப்பையும், கனவையும் குழி தோண்டிப் புதைக்கும் இந்த *#SofaModel* அரசின் நாடகங்களை மக்கள் மன்றம் நிச்சயம் தண்டிக்கும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை முறையாக வழங்கப்படவில்லை!

# உதவித்தொகை வழங்கப்படாததற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

### பேரவையில் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் கேள்வி!

சென்னை, ஆக. 21 - அம்பேத்கர் அயலக கல்வி உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் கேள்வி எழுப்பியுள்ளார்.



அம்பேத்கர் அயலக கல்வி உதவித் திட்டம் தொடர்பாக கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து பேசிய முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், மலை கிராம ஆதி திராவிட மாணவர்கள் கூட வெளிநாடு சென்று உயர்கல்வி பயிலக்கூடிய, இந்த மகத்தான திட்டத்தை முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்ததாக பெருமிதம் தெரிவித்தார். இத்திட்டத்தின் வாயிலாக மலேசியாவில் உயர்கல்வி பயிலும் மாணவர் பாரதிதாசன் உதவித் தொகைக் கிடைக்கவில்லை என வீடியோ வெளியிட்டதை சுட்டிக்காட்டிய கோவி.செழியன், உதவித் தொகை முறையாக வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டின் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்று வினவினார் முன்னாள் அமைச்சர் கோவி.செழியன்.

### சேலத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் எடுக்கும் வட மாநிலத்தவர்!

# பள்ளிக் கல்வித் துறையிலும் வட மாநிலத்தவரை நியமித்த த.வெ.க. அரசு!

### வடமாநில ஆசிரியர்கள் தரும் பயிற்சி புரியவில்லை என மாணவர்கள் வேதனை!

சேலம், ஆக. 21 - சேலத்தில், அரசு பள்ளி மாணவர்களுக்கு நீட், ஜேஇஇ நுழைவுத் தேர்விற்கான பாடங்களை எடுப்பதற்காக வடமாநில ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதற்கு சமூக ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களை ஒப்பந்த பணியாளர்களாக நியமித்திருப்பது தொடர்பான செய்தி வெளியாகி பெரும் அதிர்ச்சி ஏற்படுத்திய நிலையில், பள்ளி கல்வித் துறையிலும் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களை தற்போது புகுத்திருப்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அரசு பள்ளிகளில் சிறப்பாக பயிலும் மாணவ மாணவியர்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நீட், *Jee*, உள்ளிட்ட பல்வேறு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன்படி சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில் சிறப்பு மாதிரி பள்ளியில் தேர்வு செய்யப்பட்ட 300க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு, சேலம் மின்னாம்பள்ளி அருகே உள்ள தனியார் பாலிடெக்னிக் வளாகத்தில் அரசின் சார்பில் சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் அரசு பள்ளியில் சிறப்பாக பணியாற்றும் தகுதி வாய்ந்த அனுபவம் மிக்க ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. தற்போது, பயிற்சி முகாமில் அரசு பள்ளி மாணவர்களுக்கு வட மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், அனுபவம் இல்லாத பொறியாளர்கள் சிலரை கொண்டு பயிற்சி எடுப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமிழ் தெரியாத இவர்கள் ஹிந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே பேசுவதால் அரசு பள்ளி மாணவர்களுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், வட மாநிலத்தவர்களுக்கு கூடுதலான ஊதியம் வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

### மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் கேள்விகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு அநீதி!

# தேசிய மாற்றுத் திறனாளிகள் மேடை அமைப்பு - ஒன்றிய அரசுக்கு அவசர கடிதம்!

புதுடெல்லி, ஆக. 21 - மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்விகளில் மாற்று திறனாளிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. ஆட்டிசம் உள்ளிட்ட 12 பிரிவினர் விடுபட்டுள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் மாநிலங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடங்கி உள்ளது.

இந்நிலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்விகளில் மாற்றுத் திறனாளிகள் பகுதியில் 9 பிரிவுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

2016 மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டத்தில் 21 பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆனால், மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்வியில் ஆட்டிசம் உள்ளிட்ட 12 பிரிவினர் குறித்த விபரங்களை சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே, சட்டம் உறுதி அளித்துள்ள 21 பிரிவினரையும் மக்கள் தொகை கணக்கெடுப்பு வரம்புக்குள் கொண்டுவர வேண்டும் என்று தேசிய மாற்றுத் திறனாளிகள் மேடை ஒன்றிய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.

சுமார் 400 நிர்வாகிகள் இதில் கையெழுத்திட்டுள்ளனர்.

# நெல்லையில் 4 சிறுமிகளுக்கு பாலியல் வன்கொடுமை! குற்றவாளிக்கு மரண தண்டனை!

### நெல்லை மாவட்ட போக்சோ நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

நெல்லை, ஆக. 21 - நெல்லையில், பிரார்த்தனைக்கு வந்த சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில், மத போதகருக்கு மரண தண்டனை விதித்து நெல்லை மாவட்ட போக்சோ நீதிமன்றம் அதிரடி உத்தரவிட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் தேவர்குளம் அருகே பிரார்த்தனைகளுக்காக வந்த சிறுமிகளை மத போதகர் ஆபிரகாம் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் எழுந்தது.

இது தொடர்பாக ஆபிரகாம் மீது தேவர்குளம் காவல் நிலையத்தில் கடந்த 2022ம் ஆண்டு வழக்குபதிவு செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கில் பாதிரியார் ஆபிரகாம் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக நீதிமன்றம் தெரிவித்தது.

இதையடுத்து, மதபோதகர் ஆபிரகாமுக்கு மரண தண்டனை விதித்து, போக்சோ நீதிமன்ற நீதிபதி சுரேஷ்குமார், உத்தரவிட்டார்.

மேலும், பாதிக்கப்பட்ட நான்கு சிறுமிகளுக்கும் தலா 10 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 40 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும் அரசுக்கு உத்தரவிட்டார். தீர்ப்பை கேட்டதும் நீதிமன்ற அறையிலேயே ஆபிரகாம் மயங்கி விழுந்தார்.

இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.